Press Release No: 509

Date: 1/7/08

# செய்தி வெளியீடு

ஊனமுற்றோருக்கு சமூக பாதுகாப்பு வழங்கிட தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம் கடந்த ஆண்டு (2007) அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தின் நான்காவது கூட்டம், சென்னையில் இன்று (1.7.2008) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசுச் செயலர் திரு.எஸ்.எஸ்.பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், திரு.வி.கு.ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள், மற்றும் வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்தில் இதுவரை 52,890 ஊனமுற்ற நபர்கள் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வாரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் விபத்தில் மரணம் அடைந்தால் அல்லது விபத்தில் காயம் ஏற்பட்டால் நிதியுதவி, உறுப்பினர் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவி, மகப்பேறு உதவி, உறுப்பினர் இயற்கை மரணம் அடைந்தால் நிதி உதவி மற்றும் ஈமச் சடங்கிற்கு உதவி, மூக்கு கண்ணாடி வாங்க நிதி உதவி ஆகியன வழங்கப்படுகின்றன.

இத்திட்டங்களின்கீழ் இதுவரை தகுதியுள்ள 271 நபர்களுக்கு ரூ.4.38இலட்சம் செலவில் சமூகப் பாதுகாப்புத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நிதி உதவி கேட்டு விண்ணப்பிக்கும் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

இன்றைய வாரியக் கூட்டத்தில், 8 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.10,500/– கல்வி உதவித் தொகையும், 2 தம்பதிகளுக்கு தலா ரூ.2,000/– வீதம் திருமண உதவித் தொகையும், ஒரு பெண்ணிற்கு மகப்பேறு உதவியாக ரூ.6,000/–, 5 நபர்களுக்கு தலா ரூ.500/– வீதம் மூக்கு கண்ணாடிகள் வாங்கவும் நிதியுதவி மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் நேரில் வழங்கப்பட்டன.

மேலும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், சென்னை, கே.கே.நகரில் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மாநில வளம் மற்றும் பயிற்சி மையத்தில் மனவளர்ச்சி குன்றியோர், செவித்திறன் குறையுடையோர், பார்வையற்றோர், மற்றும் பல்வகை ஊனத்தினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களையும், இதர ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி வகுப்புகளையும் பார்வையிட்டார்கள்.

1–7–2008
சென்னை

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9